முகவர் தபால்
தொலைத்தொடர்புகளுக்கு
நம்பிக்கையான
ஒரே இடம்!
மிதுஷா
ரயில் நிலைய வீதி,
வவுனியா

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

24 மணி நேர
தொலைத்தொடர்பு
சேவைகளுக்கு
நம்பிக்கையான இடம்!
மிதுஷா.
புதிய பஸ் நிலைய
கட்டடம்,
வவுனியா.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 31 சனிக்கிழமை (14 5 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 167

# தமிழர் பிரச்சினைக்கு சமாதானமா, போரா?

# முடிவெடுக்க இயலாத நிலையில் அரசாங்கம்

## ருகுணு வருகிறது

உரம் மற்றும் நானாவிதப் பொருள்களுடன் 'ருகுணு' கப்பல் நேற்று காங்கேசன் துறைக்கு வந்து சேர்ந்தது.

இன்று காலை பருத்தித் துறைக்கு வந்துசேரும் இக்கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட உள்ளன. வேமாத ஒய்வூதிய வவுச்சர்களும் இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன. (இ-162-3)

## ஆளும்கட்சி உட்பூசலால் தீர்மானம் எடுப்பதில் தாமதம்

யாழ்ப்பாணம், மே 14

தமிழர் பிரச்சினைக்கு — வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு என்ன?

போரைத் தொடர்ந்து நடத்துவதா? அல்லது சமாதானத்தை உருவாக்கும் பொருட்டு அரசியல் தீர்வு காண்பதற்குச் செயலில் இறங்குவதா?

இந்த இரண்டில் எதனைச் செய்வது என்பது குறித்து முடிவெடுக்க இயலாத நிலையிலேயே அரசு உள்ளது.

ஆளுங்கட்சிக்குள் ஏற்பட்ட உட்கட்சிப் பூசலாலும், மோதலாலும் உண்டான குழப்பத்தில் தமிழர் பிரச்சினை குறித்து திட்டவட்டமான முடிவுக்கு வரமுடியாத நிலை இருப்பதாகவே தோன்றுகிறது.

அண்மையில் கொழும்பு சென்று அங்குள்ள பல முக்கிய பிரமுகர்களைச் சந்தித்தும், பல மாநாடுகளில் கலந்து கொண்டும் திரும்பிய சர்வதேச தொண்டர் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் இவ்வாறு விவரித்தார்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதா?

அல்லது பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு அதன் மூலம் தீர்வு காண்பதா?

இவற்றில் எதை மேற்கொள்வது என்ற முடிவுக்கு வர முடியாத நிலையில் அரச உயர் மட்டம் உள்ளதாக

[6ஆம் பக்கம் பார்க்க]

## திருச்சியில் காயங்களுடன் கிடந்த ஈழத் தமிழர்

### கல்வியங்காட்டை சேர்ந்தவராம்

சென்னை, மே 14

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டைச் சேர்ந்த இலங்கைத் தமிழர் ஒருவர் தோள்களிலும் கைகளிலும் வெட்டுக்காயங்களுடன் திருச்சி மாவட்டம், மின்சுருதி என்ற இடத்தில் மயக்க நிலையில் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு ரோந்தில் சென்ற பொலிஸார் அவரைக் கண்டுபிடித்து ஜெயங்கொண்டான் மருத்துவ மனையில் சேர்த்தனர்.

பொலிஸார் மேலும் விசாரணை நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## செஞ்சிலுவைச்சங்க அதிகாரியாக முதல் தடவையாக பெண் ஒருவர்

யாழ்ப்பாணம், மே 14

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரியாக பெண் ஒருவர் முதல் தடவையாக பதவி ஏற்க உள்ளார்.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு அலுவலகம், யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து ஆண் அதிகாரிகளே பொறுப்பான அதிகாரிகளாகப் பணியாற்றினார்கள்.

அடுத்த மாதம் 2ஆம் திகதி முதல் பதவியேற்கவிருக்கும் மேரி பேர்கின்ஸ் எதிர்வரும் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

இவர் 1980ஆம் ஆண்டில் இருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரியாக கென்யா, கம்போடியா, ஆப்கானிஸ்தான், கஸகஸ்தான் ஆகிய நாடுகளில் பணியாற்றியுள்ளார்.

யாழ். அலுவலக அதிகாரியாகப் பணியாற்றிய செற்றிக் பிரவாவின் இடத்துக்கே இவர் நியமனம் பெறுகிறார். (இ-3)

## டி.பியின் பட்ஜெட் உலக வங்கி கவலை

கொழும்பு, மே 14

ஜனாதிபதி விஜேதுங்கா கடந்த மேதினத்தன்று அறிவித்த 'குட்டி பஜெட்' நிவாரணத் திட்டங்கள் குறித்து உலக வங்கியும் சர்வதேச நாணயச் சபையும் கவலை தெரிவித்துள்ளன.

சுமார் 2 ஆயிரம் கோடி ரூபா செலவை ஏற்படுத்தும் பல நலன்புரி நிவாரணத் திட்டங்களை மேதினக் குட்டி பட்ஜட்டில் ஜனாதிபதி அறிவித்து இருந்தார்.

## ஸ்ரேலிங் பவுண் நாணயம் தபாலகங்களில் மாற்ற வசதி

யாழ்ப்பாணம், மே 14

ஸ்ரேலிங் பவுண் நாணயத்தைக் குடாநாட்டில் உள்ள அனைத்துத் தபாலகங்களிலும் மாற்றுவதற்கான வசதி இரண்டு மாதங்களின் பின்னர் மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரேலிங் பவுண் நாணயத்துக்குரிய மாற்று விகிதம் முன்னர் கொழும்பு தபால் திணைக்களத்தில் இருந்து அதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மூலமாக யாழ்ப்பாண பிரதம தபாலகத்துக்குக் கிடைத்து வந்தது.

ஆனால் கடந்த இரண்டு மாத காலமாக அந்த வசதி தடைப்பட்டுவிட்டது.

இப்போது ஸ்ரேலிங் பவுணுக்குரிய நாணய மாற்று விகிதத்தை திருகோணமலை பிரதம தபாலகத்திலிருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஊடாகப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வாரத்துக்குரிய மாற்று விகிதம் 70 ரூபா 41 சதமாக இருக்கும் என்று தகவல் கிடைத்திருப்பதாக இன்று சனிக்கிழமை ஸ்ரேலிங் பவுண் நாணயத்தைத் தபாலகங்களில் மாற்றிக் கொள்ளலாம் என்று யாழ். பிரதம தபாலதிபர் திரு. சுகோடீஸ்வரன் தெரிவித்தார். (அ-162)

## மாஹோ கப்பலில் மா எடுத்துவரப்படுகிறது

யாழ்ப்பாணம், மே 14

கொழும்பில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு மண்ணெண்ணெய் ஏற்றிவரும் பணியில் ஈடுபட்ட 'மாஹோ' கப்பலில் திருகோணமலையில் இருந்து ஒரு தொகுதி மா எடுத்து வரப்படவிருக்கிறது.

தற்சமயம் திருகோணமலை 'பிரிமா' ஆலையில் மா ஏற்றும் பணியில் 'மாஹோ' ஈடுபட்டுள்ளதாகவும்—

பெரும்பாலும் எதிர்வரும் 15 அல்லது 16ஆம் திகதி அது வடக்கு நோக்கிப்புறப்படும் என்றும்— தெரிவிக்கப்பட்டது

அதேவேளை — பருத்தித் துறையில் பொருள்கள் இறக்கி முடிந்து நேற்று முன்தினம் கொழும்பு திரும்பிய கோமாரி கப்பல் ஒரு தொகுதி உணவுப் பொருள்களுடன் மாத இறுதியில் பருத்தித் துறைக்கு வந்து சேரும் என எதிர் பார்க்கப்படுகிறது (இ-3)

## இன்று கிளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம், மே 14

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். (உ-5)

## கைதான மீனவர்கள் குறித்து பலாலியில் பேச்சுவார்த்தை

### செஞ்சிலுவைச் சங்க அதிகாரி செல்கிறார்

யாழ்ப்பாணம், மே 14

வடமராட்சிக் கடற்பகுதியிலும், மண்டைதீவு கடற்பகுதியிலும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் மீனவர்கள் குறித்து பேச்சுக்கள் நடத்த செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு அதிகாரி திரு செற்றிக் பிரவா எதிர்வரும் 16ஆம் திகதி பலாலி செல்கிறார்.

அத்துடன் பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய கைதிகளையும் பார்வையிடுவதுடன், அவர்களின் நலன்களையும் கவனிப்பார்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மீனவர்கள் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்களின் விடுதலை குறித்து படை அதிகாரிகளுடன் அவர் பேச்சு நடத்தவிருக்கிறார். (இ-3)

## முச்சந்தி முரளி



தேர்தல் ஸ்ரண்ட் என்று உலக வங்கிக்குத் தெரிஞ்சு போச்சு போல......!

## ஜிந்துப்பிட்டியில் மற்றும் ஒருவர் கைது

பொலிஸாரால் தேடப்பட்டு வந்த இன்னொரு பிரபல குற்றவாளியான ரவீந்திரன் அல்லது அந்த சென்றற ரவி என்றழைக்கப்படும் நபரை புறக்கோட்டைப் பொலிஸார் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜிந்துப்பிட்டிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் அந்நபர் தங்கியிருந்த போது பொலிஸார் அவரைக் கைது செய்தனர். (இ-எ-6)

## மேஜர் பரமன் கப்டன் கபிலன் வீரமரணம்

யாழ்ப்பாணம், மே 14

நேற்று முன்தினம் முல்லைத்தீவின் வட்டுவாகல் பாலத்தடியில் ஸ்ரீலங்கா ராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டதிடீர் மோதலில் முல்லைக் கோட்ட சிறப்பு பொறுப்பாளர் மேஜர் பரமன் அல்லது அப்பன்னன் (மட்டக்களப்பு), கப்டன் கபிலன் (தெய்வேந்திரன் புவனேஸ்வரன் - கிளிநொச்சி) ஆகியோர் வீரமரணமடைந்தனர். (இ-8)

## அரிசி தட்டுப்பாடு எச்சரிக்கை

கொழும்பு, மே. 14

இந்த நூற்றாண்டின் இறுதியில் ஆசியாவில் அரிசி தட்டுப்பாடு ஏற்படும் என்று பிலிப்பீன்ஸில் உள்ள சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிலையம் எச்சரித்துள்ளது.

ஆசியாவில் வசிக்கும் 300 கோடி மக்களின் பிரதான உணவு அரிசியாகும். (இ-எ-6)

## சிங்கப்பூரில் 6 பேருக்கு தூக்கு

சிங்கப்பூர், மே 14

போதை வஸ்துக் கடத்தல் குற்றத்துக்காக ஆறு மலேசியப் பிரஜைகளை சிங்கப்பூர் அரசாங்கம் நேற்று தூக்கிலிட்டது.

இவர்களில் இருவர் 200 கிறாம் ஹெரோயின் போதை வஸ்துடன் பிடிக்கப்பட்டனர் ஏனையோர் கஞ்சா மற்றும் போதைப் பொருள்களை வைத்திருந்தபோது பிடிக்கப்பட்டனர்.

இந்த ஆண்டில் இதுவரை இதே மாதிரிக் குற்றங்களுக்காக 17 பேர் மீது மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

# ஹேமாவை அமைச்சராக்கினால் பதவியில் இருந்து விலகத் தயார்!

## தேசியப் பட்டியல் எம்.பிக்கள நிபந்தனை

கொழும்பு, மே 14

ஐ.தே.கவின் எதிர்கால நவன் கருதி நிபந்தனையுடன் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்ய தயாராகவிருப்பதாக ஐ.தே.கவின் தேசியப்பட்டியல் எம்.பிக்கள் ஐ.தே.க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரவிடம் தெரிவித்துள்ளனர்.

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவியான ஹேமா பிரேமதாஸவை எம்.பியாக்கி, அவரை அமைச்சராக்க வேண்டும்என்பதே அவர்களின் நிபந்தனை ஆகும்.

தேசியப் பட்டியல் மூலம் எம்.பியான அலெக் றொபர்ட்சன், காலிங்க ஒபயவன்ச, எம்.எச். முகமது ஆகியோரே இந்த நிபந்தனையை விதித்துள்ளனர்.

ஐ.தே.க. தேசியப்பட்டியல் மூலம் 12 பேர் எம்.பிக்களான போதும் இவர்கள் மூவருமே எம்.பிக்களாக இருக்கிறார்கள்.

ஏனையவர்கள் அமைச்சர்கள், திட்ட அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் ஆகிய பதவிகளில் உள்ளனர்.

எனவே தான் மேற்கண்ட மூன்று எம்.பிக்களையும் பதவி துறக்குமாறு ஐ.தே.க. பொதுச் செயலாளர் அவர்களை நேரடியாகச் சந்தித்துக் கேட்டுள்ளார். (இ-3)

# சொத்தி உபாலி விசாரிக்கப்படும் விதம் குறித்து அதிருப்தி

கொழும்பு, மே 14

கைதான சொத்தி உபாலியை தற்போது விசாரணைக்குட்படுத்தப்பட்டு வரும்முறை குறித்து அதிருப்தி தெரிவிக்கப்பட்டிருப்பதாக் கூறப்படுகிறது.

பொலிஸ் அதிகாரிகள் சிலரும் அதிருப்தியும் கவலையும் தெரிவித்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

சொத்தி உபாலி தமது சகாக்களுடன் பல குற்றங்களைப் புரிந்துள்ளார் என்று ஏற்கனவே பல்வேறு நபர்கள் பொலிஸாருக்கு முறையிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பம்பலப்பிட்டிப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற குற்றத்தடுப்புப் பொலிஸார், சொத்தி உபாலியை விசாரித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சொத்தி உபாலி கைதில் மர்மம்

கொழும்பு, மே 14

சொத்தி உபாலியைப் பொலிஸார் கைது செய்த விதம் குறித்து மர்மம் இருப்பதாக பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த சில வட்டாரங்கள் தெரிவித்தன.

சொத்தி உபாலியின் கட்டுகாஸ்தோட்டை வீட்டை கட்டுகாஸ்தோட்டை பொலிஸார் காவல் புரிந்து வந்த சமயத்தில், சொத்தி உபாலி எவ்வாறு கட்டுகாஸ்தோட்டைக்கு வந்தார் என்ற சந்தேகம் [illegible] வட்டாரங்கள் தெரிவித்தன.

அவ்வீட்டில் [illegible]

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஷப்றா நிதி நிறுவன மீளளிப்பு:

## முதல் தவணை கொடுப்பனவு யாழ்.அலுவலகத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 14

ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் நிதி நிறுவனத்தில் வைப்புச் செய்தோருக்கான நிதி மீளளிப்புத் திட்டத்தின் கீழ், முதலாவது தவணைக் கொடுப்பனவாக 10 சதவீதத் தொகை தற்போது செலுத்தப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணப் பணிமனையூடாகப் பணத்தை வைப்புச் செய்தவர்களுக்குரிய முதலாவது தவணைக் கொடுப்பனவு, இப்போது 207, மின்சார நிலைய வீதியில் உள்ள அலுவலகத்தில் நாளாந்தம் வழங்கப்படுகிறது.

அலுவலக நாட்களில் நாள் ஒன்றுக்கு 60 பேருக்கு மீளளிப்புத் தொகை வழங்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

வாடிக்கையாளர்களை தத்தமது வைப்புச் சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றுடன் காலை 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்கும் இடையில் யாழ். அலுவலகத்துக்கு சமூகமளிக்குமாறு சிரேஷ்ட ஒருங்கிணைப்பு முகாமையாளர் கேட்டுள்ளார். (அ)

## புலிகளுடன் மத்திய அரசு ரகசிய உறவு:

## தொலைக்காட்சியில் விவாதிக்க முதல்வர் ஜெயலலிதா தயாரா?

### அமைச்சர் ராஜேஷ் பைலட் சவால்

சென்னை, மே 14

விடுதலைப் புலிகளுடன் இந்திய மத்திய அரசு இரகசிய உறவு வைத்துள்ளது என்ற குற்றச்சாட்டுக் குறித்து முதலமைச்சர் ஜெயலலிதா தொலைக்காட்சியில் விவாதம் நடத்தத் தயாரா?

இப்படி மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஸ் பைலட் சவால் விட்டார்.

வழிப்பறிக் கொள்ளைகளை நடத்தி குழப்பம் விளைவிக்கும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது என்று முதலமைச்சர் சட்டசபையில் பேசியிருப்பது பற்றிக் கேட்டதற்கு —

"நியாயமற்ற முறையில் முதலமைச்சர் ஒருவர் இப்படி பேசியிருப்பது துரதிர்ஷ்டவசமானது. இது நம்மை எங்கு கொண்டு போய் விடும் என்பது தெரியவில்லை" என்று ராஜேஸ் பைலட் பதிலளித்தார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களுக்கும்

நிதர்சனத்தினர் வழங்கும்

**"காற்று வெளி"**

நிதர்சனம் கலை பண்பாட்டுக் கழகம் இணைந்து வழங்கும்

**"மண்ணுக்காக"**

யாழ். மாவட்டத்திலுள்ள சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களும் தவறாது இவ் வீடியோ நாடா படத்தை கலை ஊடக இணையத்தில் பதிவு செய்து (Recording) பெற்றுக் கொள்ளவும்.

"பங்குனி 94" ஒளிவீச்சு வெளிவந்துள்ளது இணையத்தில் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்.

- கலை ஊடக இணையம்.

[ஐ-8152]

## முக்கிய அறிவித்தல்

### கலை ஊடக இணைய விசேட பொதுச்சபை கூட்டம்

யாழ். மாவட்டத்திலுள்ள கலை ஊடக இணைய உறுப்பினர்களுக்கான பொதுச் சபைக் கூட்டம் **05 — 06 — 1994** அன்று காலை 9-30மணிக்கு யாழ். இந்து குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். இக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள வீடியோ படப்பிடிப்பாளர்கள், வீடியோ நாடா விநியோகஸ்தர்கள், ஓடியோ நாடா விநியோகஸ்தர்கள், புகைப்படத்துறையினர், தொழில்நுட்ப சேவையாளர்கள் (ரீ.வி.-டெக்-ஜெனரேற்றர்) சகலருக்கும் அங்கத்துவ அட்டை விநியோகிக்கப்பட இருப்பதால் தவறாது கலந்து கொண்டு உங்கள் அங்கத்துவ அட்டைகளை பெற்றுக் கொள்ளவும். **30 — 05 — 1994**க்கு முன் சகல அங்கத்தவர்களும் உங்கள் அங்கத்துவ அட்டைகளை கலை ஊடக இணையத்துக்கு வந்து பதிந்து செல்லவும்.

குறிப்பு:

கலை ஊடக இணையத்தில் உறுப்புரிமையை உறுதி செய்வதன் மூலம், அங்கத்துவ அட்டையைப் பெற்று, இத் தொழில்துறையிலீடுபடுவதற்கான முற்றான அனுமதியைப் பெறுமாறு கோருகிறோம்.

செயலாளர்,
கலை ஊடக இணையம்.

[ஐ-8153]

## வீட்டுக் கிருத்திய அழைப்பு



மலர்வு: 18 — 05 — 1937

மறைவு: 14 — 04 — 1994

### அமரர் மாணிக்கம் கந்தசாமி

(முத்துலிங்கம்)

(ஆசிரியர் உயரப்புலம் மெ. மி. வித்தியாலயம்.)

பாசமுடன் வளர்த்து நேசமுடன் மடிசாய்ந்து மின்னலென மறைந்த குலவிளக்கே. ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கிறோம்,

இன்று (14 - 05 - 1994) சனிக்கிழமை அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளும்படி நண்பர்கள், உற்றார், உறவினர்களை அழைக்கின்றோம்.

மனைவி, மகன், மகள்மார்.

"திருவேரகம்",
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். [30873]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் மாணிக்கம் கந்தசாமி

(ஆசிரியர், உயரப்புலம் மெ. மி. வித்தியாலயம்)

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் அன்னார் ஆற்றிய சேவைகளை எமது பாடசாலைச் சமூகம் நன்றியுடன் மதித்து அஞ்சலி செய்து ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றார்கள்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
பா. அ. சங்கம், ப. மா. சங்கம்.

(30874)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஈ. எஸ் பேரம்பலம் சகநிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தும் 9 ஆவது வருடாந்த மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 1.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கழகக் கொடியை ஏற்றி வைத்து போட்டியை ஆரம்பித்து வைப்பார். இப்போட்டிக்கு சிறப்பு விருந்தினராக ஈ. எஸ். பேரம்பலம் சகநிறுவன உரிமையாளர் திரு. பே. நாகராசா கலந்து கொள்ளுவார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள 16 கழக அணிகள் இச்சுற்றுப் போட்டி ஆட்டங்களில் பங்குபற்றுகின்றன.

இன்றும் நாளையும் நடைபெறும் ஆட்டங்களில் மோதும் அணிகள் வருமாறு:-

★ இன்று பிற்பகல் 1.00 மணி:- ஸ்ரான்லி வி. க. அணி எதிர் ஜெ லி ஸ்ரார்ஸ் வி. க. அணி.

★ நாளை காலை 8-30 மணி:- சென்றலைட்ஸ் வி. க. நீல அணி எதிர் மானிப்பாய் பரிஸ் வி. க. அணி.

★ நாளை பிற்பகல் 1.00 மணி:- சென்றலைட்ஸ் வி. க. சொக்லி அணி எதிர் பற்றிஷியன் வி. க. அணி. (உ)

★ ★ ★

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்று பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபால்கரன் விளையாட்டரங்கில் நடைபெறும் இறுதியாட்டத்தில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ அளவெட்டி விநாயகர் அணி எதிர் மயிலணி ஞான முருகன் அணி. (இ-143-20)

★ ★ ★

யாழ். ஐங்கரன் விளையாட்டுக்கழகம் கழக மைதானத்தில் நடத்திவரும் சுற்றுப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:

மென்பந்து கிரிக்கெட்

★ மு. ப. 9 மணி:- கண்டுகுழி பாரதி வி. க. அணி எதிர் அடைக்கல அன்னை 'ஏ' அணி.

★ மு. ப. 11.30 — கொய்யாத்தோட்டம் அணி எதிர் வீனஸ் அணி.

கரப்பந்தாட்டம் (செற்அப்)

★ பி. ப. 4 மணி — கிங்ஸ்வேரா வி. க அணி எதிர் கே. கே. எஸ். வி. க. அணி.

(இ-8)

## வீரவணக்க கூட்டம்

வலிகாமம் கோட்டம் உடுவில் தெல்லிப்பளை வட்ட மாதாந்த மாவீரர் வீரவணக்கக் கூட்டம் இன்று சனிக்கிழமை இரவு 7-30 மணிக்கு மல்வம் ஞானபிரகாசர் கலைமன்றத்தில் நடைபெறும்.

கூட்டத்துக்கு வட்டப் பொறுப்பாளர் திரு.ஒப்பிலேறிவன் தலைமை வகிப்பார் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஓ)

## விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

நடத்தும்

### கரும்புலிகள் நாளையொட்டிய அரங்க விழாவும், கிராமிய ஆட்ட கலை விழாவும்

05 - 07 - 1994 அன்று நடைபெறவிருக்கும் கரும்புலிகள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் மாவட்டங்கள் மட்டத்தில் நடத்தவிருக்கும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் அமைப்புக்கள், தனிநபர்களுக்கான விதிமுறைகளை கீழே வகைப்படுத்தித் தருகின்றோம்.

சகல போட்டிகளுக்குமான விண்ணப்பங்களும், கோட்ட மட்டத்திலான விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக செயலகங்களில் 02 - 06 - 1994 க்கு முன்னதாக நேரில் கையளிக்கப்பட வேண்டும்.

#### அரங்க வகைகளும் போட்டி விதிமுறைகளும்

1. பாரம்பரிய அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக கூத்து, இசைநாடகம், வரலாற்று நாடகம், இலக்கிய நாடக வடிவங்களைக் கொண்டவையாக இவை அமையும்.
2. நவீன அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக இயல்புநெறிவாதம், யதார்த்தவாதம், மோடிமை, குறியீட்டுத்தன்மை கொண்டவையாக இவை அமையும்.

#### பொது அறிவுறுத்தல்கள்

1. கலை வடிவங்களின் கருப்பொருள் சமகாலப் பிரச்சினைகள், நிகழ்வுகளை பொட்டியதாகவும், கலை யம்சம் நிறைந்ததாகவும் எமது விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைதல் வரவேற்கத்தக்கது.
2. நாடகம் 45 நிமிடங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும். (ஐந்து நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்.)
3. (அ) சிறந்த நடிகர்
   (ஆ) சிறந்த நடிகை
   (இ) சிறந்த நெறியாள்கை
   (ஈ) சிறந்த எழுத்துரு
   (உ) சிறந்த இசையமைப்பு
   (ஊ) சிறந்த வேடப்புனைவு
   என்பவற்றிற்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.

#### சிறுவர் அரங்கு

சிறுவர்களின் வயதிற்கும் உளவளர்ச்சிக்கும் அமைவாகக் கருப்பொருள் அமைய வேண்டும்; அத்துடன் நாடக அளிக்கையில் சிறார்களே பங்குகொள்ள வேண்டும். பின்னணி வாத்தியக் கருவிகளை மட்டும் பெரியோர் கையாளலாம்.

#### பொது அறிவுறுத்தல்கள்

(அ) நாடக அளிக்கையில் ஆறு தொடக்கம் பன்னிரண்டு (6—12) வயது வரையுள்ள சிறுவர்கள் கீழ்ப்பிரிவிலும், 13 தொடக்கம் 17 வயது வரை உள்ளவர்கள் மேற்பிரிவிலும் அடங்குவர்,

(ஆ) கீழ்ப்பிரிவு நாடகம் 20 நிமிடங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும். 2 நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்)

(இ) மேற்பிரிவின் நாடகம் 30 நிமிடங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும். (5 நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்)

(ஈ) சிறுவர் நாடகங்களை பாடசாலைகளோ, தனிநபர்களோ, அமைப்புக்களோ தயாரிக்கலாம்,

(உ) நாடகங்களில் பங்கேற்கும் சிறுவர்களின் வயதெல்லையை பாடசாலைகளாயின் பாடசாலை அதிபர்களும், தனிநபர் தயாரிப்பு அல்லது அமைப்புக்களின் தயாரிப்புக்களாயின் அப்பகுதி கிராம சேவகரும் உறுதிப்படுத்த வேண்டும்.

(ஊ) நாடக அளிக்கையில் பங்குகொள்ளும் சிறுவர்களின் எண்ணிக்கை 15க்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

#### கிராமிய ஆட்டக் கலைப் போட்டிகள்

1. கோலாட்டம்
2. காவடி
3. ஆட்டக்காவடி
4. கும்மி

#### பொது அறிவுறுத்தல்கள்

(அ) இவை ஒவ்வொன்றும் 10 நிமிடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

✲ குறிப்பு

(அ) ஒவ்வொரு போட்டியிலும் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று தெரிவுகளுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

(ஆ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது,

(இ) தயாரிப்புக்களுக்கான செலவுகளையும், போக்குவரத்துக்கான செலவுகளையும் தயாரிப்பவர்களே பொறுப்பேற்க வேண்டும். மாவட்ட மட்டத்திலான போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்படும் தயாரிப்புகளுக்கான போக்குவரத்து வசதிகளை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் பொறுப்பேற்கும்.

(ஈ) மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் அந்தந்த கோட்டக் கலை, பண்பாட்டுக் கழகச் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்,
நடுவப் பணியகம்,
தமிழீழம்.

[ஐ-8131]

## நேர்முகப் பரீட்சை; கலை பட்டதாரிகள் வரத் தேவையில்லை

யாழ்ப்பாணம், மே 14

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் பதவிகளுக்கு எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் கல்வித் திணைக்களத்தில் நடக்கவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட கலைப்பட்டதாரிகள் சமுகமளிக்க தேவையில்லை என்றும்—

கலைப்பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை பிறிதொரு தினத்தில் நடைபெறும் என யாழ் கல்வி வலயம் I இன் பணிப்பாளர் அறிவித்துள்ளார். [ஒ-3]

## பல்கலைக்கழக விசேட அனுமதி 1992/93

யாழ். பல்கலைக்கழகத்திற்கு விசேட அனுமதியில் தெரிவான மாணவர்கள் உடனடியாக தமது பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவின்போது பின்வரும் ஆவணங்களையும் அவற்றின் நிழல் பிரதிகளையும் எடுத்துவருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1. புகைப்படங்கள் [08]
2. பிறப்புச் சான்றிதழ்
3. பாடசாலை விடுகைப் பத்திரம்
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கடிதம்
5. தேசிய அடையாள அட்டை
6. பதிவுக்கட்டணம்— ரூபா 175

(புவியியல் ஒரு பாடமாக எடுப்பவர்கள் மேலதிகமாக ரூபா 100 செலுத்த வேண்டும்)

-பதிவாளர்,
பரீட்சைக் கிளை,
யாழ். பல்கலைக் கழகம்
10-05-1994

[ஐ-8140]

## கரப்பந்தாட்ட இறுதி சுற்றுப் போட்டி இன்று

யாழ்ப்பாணம், மே. 14

யாழ்ப்பாணம் வலயம் 1 பாடசாலைகளின் கரப்பந்தாட்ட இறுதிச் சுற்றுப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.


பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விறுதிப் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக வலயம் 1 பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பியும், சிறப்பு விருந்தினராக தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்த திரு. அருளும் கலந்து கொள்வர்.

17 வயதுப் பிரிவில் 3 ஆம் இடத்துக்கான போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து சென், ஜோசேப் மகா வித்தியாலயம் மோதும்.

முதலாம் இடத்துக்கான போட்டியில் மத்திய கல்லூரியை எதிர்த்து கனகரத்தினம் மகா வித்தியாலயம் மோதும்.

19 வயதுப் பிரிவில் - 3 ஆம் இடத்துக்கு கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தை எதிர்த்து சென் ஜோன்ஸ் கல்லூரி மோதும். முதலாம் இடத்துக்கு— மத்திய கல்லூரியை எதிர்த்து மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதயாக் கல்லூரி மோதும். (இ-3)

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் கணபதிப்பிள்ளை வல்லிபுரம்

(உரிமையாளர், சிவலிங்கம் மில், பிரபல வர்த்தகர்)

பூவுலகில்: 26 — 01 — 1926

விண்ணுலகில்: 25 — 04 — 1993

திதி: **14 - 05 - 1994**

எங்கள் குல விளக்காய் குடும்பத்தில் ஒளிச்சுடராய் ஒளிவீசி எங்களையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு சிவபதமடைந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமதி தெய்வானை வல்லிபுரம்;

"வேலகம்"
குருக்கட்டு, சரணவாய் தெற்கு,
கரவெட்டி. [7379]

இப்போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் கீழ்வரும் மாதிரிப் படிவத்தை பூர்த்தி செய்து விண்ணப்பிக்கவும்.

## விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

நடத்தும்

### கரும்புலிகள் நாளையொட்டிய அரங்க விழாவும் கிராமிய ஆட்டக் கலை விழாவும்

### விண்ணப்பப் படிவம்

1) பங்குபற்றும் அமைப்பின் பெயர்: ..............................

2) முகவரி: ..............................

3) கோட்டத்தின் பெயர்: ..............................

4) நாடகத்தின் தன்மை:
அ! ..............................
ஆ! ..............................
இ! ..............................
ஈ! ..............................

5) கிராமிய ஆட்டக்கலை:
அ! ..............................
ஆ: ..............................
இ! ..............................
ஈ! ..............................

இப்போட்டிகளின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ளுகின்றேன் என்பதை அறியத்தருகின்றேன்,

..............................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

(ஐ-8157)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் சென். பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க வித்தியாசாலை

# அதிபர் அருட்சகோதரி எம். லைசா


அவர்களின்

## சேவை நலன் பாராட்டு விழா மலர்

## கல்வி வளர்ச்சிக்கு தம்மையே அர்ப்பணித்த அருட்சகோதரி

பல்வேறு இன்னல்களும், இடையூறுகளும், வசதியீனங்களும் நிறைந்துள்ள எமது சமுதாயத்தில் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இன்னும் சிறப்பாக பல்வேறு ரீதியில் "ஏழைகளாயிருப்போர்" மத்தியில் சிறுவர் உருவாக்கத்தை உணர்ந்து செயற்பட்டவரே அருட்செல்வி லைசா. கடந்த பத்து ஆண்டுகளில் இப்பாடசாலை தொடர்ந்து வளர தம்மையே முழுமையாக அர்ப்பணித்து அயராது உழைத்த அருட்செல்வியைப் பாராட்டாதிருக்க முடியாது. "சின்னஞ்சிறிய என் சகோதரருள் ஒருவருக்கு நீங்கள் இவற்றைச் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத்தேயு 25:40) என்ற இயேசுவின் பொன்மொழியை அவர் தனதாக்கிக் கொண்டவர்.

எமது பகுதிகளிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் இவரைப் போன்ற ஆர்வமும், திறமையுமுள்ள அதிபர்களும், ஒத்துழைக்கும் ஆசிரியர்களும் இருப்பார்களானால்,



அருட்சகோதரி எம். லைசா

எமது பகுதிகள் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் பாரிய வளர்ச்சியைக் காணும் என்பதில் ஐயமில்லை.

இவ்விழாவில் அவரின் எல்லாப் பணிகளுக்கும் பங்குமக்கள் சார்பிலும் நன்றி கூறி, அருட்செல்வி லைசா தொடர்ந்து ஆற்றவிருக்கும் பணிகள் அனைத்தையும் இறைவன் ஆசிர்வதிக்க வேண்டுகிறேன். ★

அருள் திரு
அன்ரன் மத்தாயஸ்,
பங்குக் குரு,
புனித ஆசீர்வாதப்பர் ஆலயம்,
நல்லூர்.

### வாழ்த்துரை

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக —

என்பது வான்மறை தந்த வள்ளுவர் வாக்கு.

கத்தோலிக்க நற்குடும்பத்தின் ஒளிவிளக்காய் மலேசியாவிலே பிறந்த அருட்சகோதரி லைசா அவர்கள் வள்ளுவர் வாக்கினைத் தமது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு கற்பன கற்றார். கற்றதன் வழி நின்றார். நின்றதோடு அமையாது கலங்கரை விளக்குப்போலப் பிறருக்கும் வழிகாட்டும் துறையாகிய ஆசிரியப்பணியிலே தம்மை இணைத்துக்கொண்டு நல்லாசிரியையாய் மட்டக்களப்பு, பதுளை, திருக்கோணமலை, ஆகிய இடங்களில் பணியாற்றினார். எங்கள் பிள்ளைகளின் நற்பேறு காரணமாக, புனித பெனடிக்ற் பாடசாலை அவரை அன்புடன் அணைக்கத் தமது சேவைக் காலத்தின் பிற்பகுதியை எமக்கு வழங்கினார். அமைதியோடு எடுத்த கருமத்தினைத் திறம்படத் தொடுத்து முடித்த வகையில் அன்னவரின் பணி எம்மால் நன்றியுடன் பாராட்டத்தக்கதாகும்.

அருட்சகோதரி லைசா அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ்ந்து மனுக்குலத்திற்குத் தமது சேவைகளைத் தொடர்ந்து ஆற்ற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். பாடசாலை அபிவிருத்திச் சங்கத் விழாக்குழுத் தலைவர் என்ற வகையில் அதன் உறுப்பினர் அனைவர் சார்பிலும் அவருக்கு நன்றி கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் அருட்சகோதரி வாழ்க! அவர் தொண்டுகள் சிறக்க என்று வாழ்த்துகின்றேன்.

— வைத்தியக் கலாநிதி ஏ. உமாகாந்தன்

### ஒளி விளக்கு

ஒரு பாடசாலையின் வளர்ச்சியும் அதன் சிறப்பும் அதிபர் கையில்தான் தங்கியுள்ளது பத்து ஆண்டுகளுக்கு முன் இப்பாடசாலை மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த போது அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார் அருட் சகோதரி அவர்கள். கடமை என்ற கட்டுப்பாட்டுக்கு அப்பால் சேவை என்ற இலட்சியத்துடன் தன் கடும் உழைப்பை சேவையாக வழங்கி இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு ஒளி விளக்காக விளங்கினார். பட்டங்களும் பதவிகளும் மக்களுக்கு சேவை செய்வதற்காகவே வழங்கப்படுகின்றன என்ற உயரிய கோட்பாட்டை அவர் கடைப்பிடித்தார். அமைதி, சாந்தம், கருணை என்பனவற்றை தனது அணிகலன்களாகக் கொண்ட அருட் சகோதரியின் நிர்வாகத் திறமையும் வழிநடத்தலும் தனித்துவமானது. இதனால் இப்பகுதி மக்களின் மனங்களில் நிறைந்த இடத்தைப் பிடித்துக் கொண்டார். அவரின் சமூக சமயப் பணிகள் மேலும் சிறக்க எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிக்க வேண்டுகிறேன்.

சி. சிவராசா,
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், சபை.

### ஆசிச் செய்தி

புனித பெனடிக்ற் வித்தியாலயத்தில் கடந்த பத்து ஆண்டுகளாக அதிபராக கடமையாற்றி ஓய்வு பெறுகின்ற அருட் சகோதரி எம். லைசா அவர்கள் இப்பாடசாலைக்கு ஆற்றிய சேவை அளவிடற்கரியதாகும். இவரின் காலத்தில் இப்பாடசாலை, கல்வித் துறையிலும், விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கியமை இவரின் சிறந்த ஆளுமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. ஆன்மீகத் துறைக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த சங். அருட் சகோதரி, மாணவர் கல்வித்துறை விருத்திக்காகக் குறிப்பிடத்தக்க சிறந்த பணியாற்றிப் பெருமை பெறுகின்றார். அவர் பணி தொடர, பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என ஆண்டவன் கருணையை இறைஞ்சுகின்றேன்.

- சி. புலந்திரன்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் / நல்லூர்.



(30883)


## ஆசிரிய ஆலோசகர் பதவி இன்று போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம் மே 14

ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான போட்டிப் பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9மணி முதல் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையில் நடைபெறவிருக்கிறது.

ஆரம்ப பொது, இடைநிலை கணிதம் ஆகிய இரு பாடங்களுக்கு வெற்றிடங்கள் இல்லாத காரணத்தால் அவற்றுக்கான பரீட்சைகள் நடைபெறமாட்டா என்றும்—

ஏற்கனவே சேவைக்கால ஆசிரியர் நியமனம் பெற்றுப் பணியாற்றியவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றத் தேவையில்லை என்றும்—

எனினும் பாட மாற்றம் கோரி விண்ணப்பித்தவர்கள் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்றும் — அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## 5 கைதிகள் தப்பினர்!

கொழும்பு, மே 14

கண்டி போகம்பர சிறைக்கு பாதுகாப்புடன் ரயிலில் அழைத்துச் செல்லப்பட்ட 5 கைதிகள் இடைவழியில் ரயிலில் இருந்து குதித்து தப்பியோடிவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பிலிருந்து கடந்த சனிக்கிழமை போகம்பரை சிறைக்கு அழைத்துச்செல்லப்பட்ட போதே ரம்புக்கணையில் வைத்து அவர்கள் தப்பியோடினர். (ஒ-த)


கொக்குவில்
கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் (புதுக்கோயில்)
வருடாந்த மஹோற்சவம்

ஞாயிறு (15-05-94) தொடக்கம் புதன் (25-05-94) வரை நடைபெறும். தினமும் மாலை 7-00 மணி தொடக்கம் 8-00மணி வரை 'கந்தபுராணம்' தொடர் விரிவுரை நடைபெறும்.

நிகழ்த்துபவர்:
தமிழருவி திரு. த. சிவகுமாரன்
(காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர்,
ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி)

21-05-94 (சனி) காலை 9-00 மணிக்கு மாணவர்களுக்கான சைவசமய அறிவுப்போட்டி பரீட்சை கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். 26-05-94 (வியாழன்) மாலை 6-00 மணிக்கு பரிசளிப்பு விழா நடைபெறும். இதனைத் தொடர்ந்து இசை நிகழ்ச்சி நடைபெறும்.

(30863) — பரிபாலன சபையார்.



BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க

புதிய பிரிவு 94 O/L

DAY CLASS

எமது வழமையான Super Grade ஆசிரிய குழுவினால்

ஆரம்பம்: 16 - 05 - 1994
திங்கள் காலை 8-00 மணி

விண்ணப்பங்களை முன் கூட்டியே பதிவு செய்யவும்.

[சி-8092]



ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 10 — 06 — 1967

விண்ணில்: 14 — 05 — 1993

செல்வன் குலசிங்கம் சிவகுமார்
(அமைச்சர்)
(யாழ். பல்கலைக்கழக 89/90 கல்வியாண்டு பௌதீக விஞ்ஞான பிரிவு மாணவன்)

அன்பென்னும் வனாக சோலையில்
அகமகிழ்ந்து கூடிய குயில்கள் நாம்
அமைச்சர் உனைப்பிரிந்து
ஆண்டொன்று கடந்தாலும்
அழியாது உன் நினைவுகள்

பிரிவால் நினைந்துருகும்
சக மாணவர்கள்,
(4 ஆம் வருட பௌதீக விஞ்ஞானப்பிரிவு.)

(30871)


## மாணவ தாதிகள் போட்டிப் பரீட்சை 21 இல்

மாணவ தாதிகள் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஐந்து பரீட்சை நிலையங்களில் நடைபெறவிருக்கிறது.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக யாழ். வலயம் ஒன்று பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-3)

## சித்த மருத்துவச் சங்கம் அமைப்பதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 14

சித்த மருத்துவத் துறையின் தனித்துவத்தை பேணும் நோக்கிலும், அத்துறையின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வசதியாகவும் சித்த மருத்துவச் சங்கம் ஒன்றை யாழ். அரச அதிபர் தலைமையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு சங்கத்தின் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதன் ஒரு நடவடிக்கையாக கிராம சேவை அலுவலர் பிரிவு ரீதியாக சித்த மருத்துவர்களின் விவரங்களை சேகரிக்குமாறு சகல பிரதேச செயலாளர்களுக்கும் யாழ். அரச அதிபர் பணித்துள்ளார். (ஒ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அடைவைக்கக்கூடிய நல்ல இன கோழிமுட்டைகள், பண்டம், வான்கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, சுத்திரைச் சந்தையடி, நல்லூர். (30843)

சுத்தமான யப்பனீஸ் ஸ்பிட்ஸ் நாய்குட்டிகள் கறுப்பு, வெள்ளை, பிறவுண் நிறங்களில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, கண்டிக்குளி யாழ்ப்பாணம். (7381)

எம்மிடம் நல்லஇனமுட்டையிடும் கோழிகளும் மற்றும் இறைச்சிக்கோழிகளும் விற்பனைக்குண்டு. குறிப்பு: சனிக்கிழமை 2 மணிக்குப் பின்பும் ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் விற்பனை செய்யப்படும் இ. சகிகரன், 11/1, ராசா ஒழுங்கை வண். பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். [7382]

### கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல ஓடும் நிலையில் உள்ள ஆடம்பர கோர்ட்சுப்றின் நவீன கார் பற்றியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 48/1, முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டுக் கழக ஒழுங்கை), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-8146)

### ஆனந்தம் சீயாக்காய்

சித்தமருத்துவ ஆலோசனைப்படி தயாரிக்கப்பெற்ற ஆறு இயற்கைப் பொருள்கள் சேர்ந்த ஆனந்தம் சீயாக்காய் பவுடர். ஐந்து நிமிடம் வெந்நீரில் ஊற போட்டால் சம்பூ போன்று செயல்பட்டு அழுக்கை அகற்றி கண்ணுக்கு குளிர்ச்சி அளிக்கிறது. கேட்டு வாங்குங்கள் ஆனந்தம். (7361)

### வீடு, வளவு விற்பனைக்கு

தாவடி சுதுமலை பிரதான வீதியில் அமைந்துள்ள "ஸ்ரீபதி" பெரிய வீடும், 5 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு. ச. ஆறுமுகம், முருகமூர்த்தி கோயிலடி, தாவடி தெற்கு, கொக்குவில். (30849)

திருநெல்வேலி சிவன் புது வீதியில் அமைந்துள்ள ஒரு பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: பா. தவபாலன் (சட்டத்தரணி), இல. 82/5, நல்லூர் குறுக்குத் தெரு, நல்லூர். 30870)

### இலகு திருமண சேவை

35 வயது, பூராடம், கிரகபாவம் 10 France வீசாவுடன் தொழில்புரிபவருக்கு மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில் செய்யலாம் தொடர்பு ஞாயிறு காலை, புதன் மாலை. விமலா, நாச்சிமார் கோயிலடி. (30868)

### தேவை

அச்சுக்கோர்ப்பதில் அனுபவம் உள்ள பெண்பிள்ளைகள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். திருவள்ளுவர் அச்சகம், [யாழ். மாநகரசபை அருகில்) 593, பருத்தித்துறை வீதி, நல்லூர். (30869)

பேக்கரி தயாரிப்பு உணவுப் பொருள்களை விற்பனை செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை: சி. இராமச்சந்திரன், தாவடிச்சந்தி, கொக்குவில். (30855)

### உழுந்து உடைத்தல்

வியாபாரிகளே உங்களிடம் உள்ள உழுந்தை வந்து கையால் உடைத்து பருப்பாக்கி கொடுக்கப்படும். ஒரு கிலோவுக்கு கூலி ஒரு ரூபாய் மட்டும். விவரங்களுக்கு: பா. சதீஸ், 80, மாநகரசபை பாய்க்கடை, யாழ்ப்பாணம். (7380)

### தவறிவிட்டது

3-5-94 அன்று 705120218V அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து த. இராசையா, வேம்பன் வீதி, உரும்பிராய் தெற்கு விலாசத்தில் ஒப்படைக்கவும். (30864)

## A/L 96
## புதிய பிரிவு

ஆரம்பம்:
**14-05-94**
[7 மணி]
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி/8098)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தேவைப்படும் அறிவுமட்டம் வரை பாடசாலைப் பிள்ளைகளுக்கும், அரச தனியார் துறைகளில் வேலை செய்பவர்களுக்கும், விடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். வெளி தவிர்ந்த ஏனைய நாட்களில் நேரிலும் அல்லது கடித மூலமும் தொடர்பு கொள்ளலாம். S. ஜெயராஜா, 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [7372]

## சுதந்திரப் பறவைகள்

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் அதிகார பூர்வ ஏடான "சுதந்திரப் பறவைகள்" வைகாசி மாத இதழ் இன்று சனிக்கிழமை வெளிவரவுள்ளது.

சீதனமும் தேச வழமைச் சட்டமும், தமிழீழ சட்டக் கோவை பெண்களின் உரிமைகளை எப்படிப் பாதுகாக்கின்றது, நாம் கடந்து வந்த பாதை ஆகிய கட்டுரைகள், மற்றும் கதை, கவிதை ஆகிய அம்சங்கள் வைகாசி இதழை அலங்கரிக்கின்றன. (அ)

## கராத்தே போட்டி

யாழ்ப்பாணம், மே 14

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்படும் கராத்தே போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன. யாழ். மாவட்டத்தின் சகல பிரபல பயிற்றுநர்களின் மாணவர்களும் இதில் பங்கு பற்றுகின்றார்கள். (ஓ)

## அன்பளிப்பு

தென்மராட்சி,மே, 14

புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தா கல்லூரி முன்னாள் அதிபர் சங்கரப்பிள்ளை வீரசிங்கம் நினைவாக ரூபா 10 ஆயிரத்தை கல்வி மேம்பாட்டு நிதியத்திற்கு திருமதி வசந்தநாயகி இராசசிங்கம் வழங்கியுள்ளார். (ஒ-117)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## O/L DAY CLASSES
(8-30 — 2-00)

### புதிய 5 ஆம் பிரிவு
### ஆரம்பம்: 16 - 05 - 1994
(திங்கள்) காலை 8-30மணி

❋ திறமையால் பிரபல்யமான திறமைமிக்க யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை

[சி/8095]

வட கோவை
அருள்மிகு
## ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில்
கோப்பாய்
# வருடாந்த மகோற்சவம்
(15 — 05 — 1994) — (25 — 05 — 1994)

கொடியேற்றம் — 15 - 05 - 1994 ஞாயிற்றுக்கிழமை பகல் 11-00 மணி

தேர்த்திருவிழா / ரதோற்சவம் — 23 - 05 - 1994 திங்கட்கிழமை முற்பகல் 9-00 மணி

தீர்த்தம் — 24 - 05 - 1994 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணி

திருக்கல்யாணம் — 25 - 05 - 1994 புதன்கிழமை இரவு 7-00 மணி

முருகன் அடியார்கள் அனைவரும் வருகை தந்து எம் பெருமானை வணங்கி இஷ்டசித்திகளை பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

- ஆலய பரிபாலன சபை.

கோப்பாய். [30854]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி அன்னபூரணம் இராசா

தோற்றம்: 05 — 04 — 1932 மறைவு: 14 — 04 — 1994

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய், கடமையின் இருப்பிடமாய் இருந்து திடீரென எம்மை ஆறாத் துயரில் மூழ்க வைத்து மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள், அக்கா,
மச்சாள்மார், பரமேஸ்வரி,
பெறாமக்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

குளப்பிட்டி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (7377)

# நன்றி நவிலலும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



## செல்வி நாகலிங்கம் இந்துமதி

(நயினாதீவு)
(உதவி அரச அதிபர், பிரதேச செயலர் கிளிநொச்சி)

மலர்வு: 26 — 08 — 1945
உதிர்வு: 14 — 04 — 1994

14-04-1994இல் இறைபதம் எய்திய எமது குடும்ப ஜோதி செல்வி நாகலிங்கம் இந்துமதி அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் பல வழிகளிலும் எமக்கு உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மேலும் இன்று 14-05-1994இல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி கிரியைகளில் கலந்து கொண்டு அமரரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் பங்கு பற்றும்படி வேண்டுகின்றோம்.

— குடும்பத்தினர்.

25, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம். [30860]

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ வருடம், சித்திரைத் திங்கள் 30ஆம் நாள் (14-05-1994) சனிக்கிழமை பகல் 10-54 மணி முதல் 1-00 மணி வரையுள்ள திருவாதிரை நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

திரு. திருமதி கனகரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **சிவதாஸ்** அவர்களுக்கும்

திரு. திருமதி சிவகுருநாதர் தம்பதிகளின் புத்திரி திருநிறை செல்வி **பேரின்பமணி** அவர்களுக்கும்

திருவருள் துணையுடன் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமண மண்டபம்: ZWOLF - ABOSTEL - PLATZ-1,
86163 AUGSBURG GERMANY.

❋ இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும் ❋

திரு மு. கனகரெத்தினம்
(ஓய்வுபெற்ற அதிபர்),
திருமதி ம. கனகரெத்தினம்,
95, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

திரு க. சிவகுருநாதர்
(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்),
திருமதி நீ. சிவகுருநாதர்,
[7378]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
393/3, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## குதிரையை எங்கே பூட்டுவது?

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இன்னும் சுமுகநிலை திரும்பவில்லை. ஆகவே ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப எடுக்கும் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

இவ்வாறு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் ஜெனிவா தலைமையகம் மேற்கு நாடுகளைக் கேட்டிருக்கிறது.

ஈழத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதை நிறுத்துமாறு ஐ. நா. தூதரகத் தலைமையகம் இந்தியாவிடமும் இம் மாத ஆரம்பத்தில் கேட்டிருந்தது.

ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்ற கோரிக்கையை இந்தியாவிடம் மட்டும் முன்வைக்காமல், மேற்கு ஐரோப்பிய நாடுகளிடமும் வலியுறுத்த வேண்டும் என்று இம் மாதம் நான்காம் திகதி இந்தப் பத்தியில் கேட்டிருந்தோம். ஒரு வார காலத்தில் அவ்வாறே நடந்திருக்கிறது.

இந்தியா, மிகக் குறிப்பாகத் தமிழக அரசு ஈழத் தமிழ் அகதிகளைச் சர்வதேச விதிகளுக்கு முரணாக, மனிதநேய உணர்வைக் கொன்று கொண்டு பலவந்தமாக அனுப்புவதற்கு அவசரம் காட்டுவதில் உள்ளூரக் காரணம் உண்டு.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தனக்கு அரசியல் லாபம் தேடவும், மத்திய அரசுடன் முரண்டு பிடித்து வஞ்சம் தீர்க்கவும் ஈழத் தமிழ் அகதிகள் விவகாரத்தைப் பயன்படுத்தி வருகிறார்.

திரும்பிச் செல்வதற்கான ஒப்புதல் படிவத்தில் அகதிகளின் கையொப்பத்தை வாங்குவதற்காக, சிறிதும் மனிதாபிமானமோ, மன இரக்கமோ இல்லாமல் அவர்களுக்கு வழங்கும் உணவு மற்றும் உதவிகளை நிறுத்துகிறார் என்றால் ஜெயலலிதாவை மனிதப்பிறவி என்று எப்படிக் கூறுவது?

அவரை முன்னுதாரணமாகக் கொண்டு சுவிற்சர்லாந்து, நெதர்லாந்து போன்ற நாடுகளும் ஈழத் தமிழ் அகதிகளை பலவந்தமாக திருப்பி அனுப்புவதற்கு ஆயத்தங்கள் செய்துவருகின்றன. பிரிட்டனில் நடந்த மனித உரிமைகள் காப்புக் குழுக் கூட்டத்தில் இலங்கையில் நிலவும் நிலைதொடர்பில் பல்வேறு பிரதிநிதிகளும் கூறிய விடயங்களை மேற்கு நாடுகள் சற்று அவதானமாக நோக்க வேண்டும்.

★ கைதிகள் மற்றும் ஆட்கள் காணாமல் போவது சாதாரணமாகிவிட்ட இலங்கைக்குத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பக்கூடாது.

★ அகதிகள் இலங்கைக்குத் திரும்பியவுடன் பயங்கரவாத நடவடிக்கை தொடர்பான சந்தேகத்துக்குரியவர்கள் ஆவார்கள்.

★ இப்போதே கொழும்பில் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்று கூறிக் கைது செய்யப்படுகிறார்கள்.

★ திருப்பி அனுப்பப்படும் தமிழ் அகதிகளில் பெரும்பாலானோர் கொழும்புப் பகுதியில் தங்க வைக்கப்படும் போது அவர்களும் கைது செய்யப்படுவார்கள் — என்று அங்கு முன் வைக்கப்பட்ட உண்மை நிலையை ஆராய வேண்டும்.

இவற்றை ஆராய்ந்து அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் யோசனையை ஏற்று இலங்கையின் வடக்கு - கிழக்கில் யுத்தம் முடிவுக்கு வரும் வரையும், அதன் விளைவாக தெற்கில் தமிழர்கள் சந்தேகப் பிராணிகளாகப் பார்க்கப்படாத நிலை உருவாகும் வரையும் அகதிகளை திருப்பி அனுப்பக்கூடாது.

அகதிகளை திருப்பி அனுப்பத்தான் வேண்டும் என்ற கட்டாயம் தமக்கு ஏற்படுமானால், அதனைச் செய்வதற்கு முன் இந்தியாவும் மேற்கு நாடுகளும் வடக்கு-கிழக்கில் யுத்தத்தை நிறுத்துமாறும், தமிழர் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணுமாறும் ஸ்ரீலங்கா அரசுக்கு காத்திரமான அழுத்தத்தைக் கொடுக்கட்டும் பார்க்கலாம்! வண்டியின் முன்பக்கத்தில் குதிரையைப் பூட்டாமல் பின்பக்கத்திலா கட்டுவது?

பொஸ்னிய முஸ்லிம் குடியரசு மீதான

# ஆயுத தடையை அமெரிக்கா உடன் நீக்கிவிட வேண்டும்

## செனட்சபை தீர்மானம்

வாஷிங்டன், மே 14

முன்னாள் யூகோஸ்லேவியாவில் உள்ள பொஸ்னிய முஸ்லிம் குடியரசு மீது விதிக்கப்பட்டுள்ள ஆயுதத் தடையை அமெரிக்கா ஒருதலைப்பட்சமாக நீக்கிவிட வேண்டும் என்று அமெரிக்க செனட்சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

சேர்பியர்களின் தாக்குதலைச் சமாளிக்க பொஸ்னிய முஸ்லிம்கள் தங்களை ஆயுதபாணிகளாக மாற்றுவதற்கு இத்தடை நீக்கம் உதவும் என்றும் —

சேர்பியர்களுடன் நடைபெறும் சண்டையில் முஸ்லிம்கள் நல்ல முறையில் சண்டையிட இது உதவும் என்றும் அமெரிக்க செனட்சபையில் பல உறுப்பினர்கள் வற்புறுத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொஸ்னியாவில் முஸ்லிம்களின் பிரதேசங்களைக் கைப்பற்றும் சண்டையில் சேர்பிய படைகள் ஈடுபட்டுள்ளன என்பது தெரிந்ததே.

முஸ்லிம்கள் மீதான ஆயுதத் தடையை ஒருதலைப்பட்சமாக நீக்கமுடியாது என்று அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் கூறி வருகின்றார்.

அமெரிக்க செனட் எடுத்துள்ள நிலைப்பாடு, ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையே பொஸ்னிய விவகாரம் குறித்து கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதை காட்டுகிறது என்று பி. பி. ஸி. தெரிவித்தது. (ஒ-எ)

## பலஸ்தீன சுயாட்சி அரசின் தலைநகராக ஜெரிக்கோ!

### பலஸ்தீனியர் கொடியேற்றி ஆரவாரம்

ஜெரிக்கோ, மே 14

பலஸ்தீன சுயாட்சி அரசின் தலைநகராக ஜெரிக்கோ விளங்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

பலஸ்தீனியரிடம் நிர்வாகத்தைக் கையளிப்பதில் இஸ்ரேலியர்கள் நேற்று தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

ஜெரிக்கோ நகரில் பொலீஸ் நிலையம் ஒன்றை பலஸ்தீனியர் பொறுப்பேற்றனர் தபால் அலுவலகமும் பலஸ்தீனியரிடம் ஒப்படைக்கப்பட்டது இதன் அறிகுறியாக இக் கட்டடத்தில் பறந்து கொண்டிருந்த இஸ்ரேலிய தேசியக் கொடி இறக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர் ஆரவாரம் செய்து குதூகலிக்க பலஸ்தீனியரின் தேசியக்கொடி பறக்க விடப்பட்டது. (ஒ-எ)

புலிகளின் குரல் வானொலியில்

14 - 05 - 1994

சனி இரவு

★ 8-01 — அறிவியற்கலசம்
★ 8-10 — தாயகப் பாடல்கள்
★ 8-25 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — சித்திரம்— 'சீதனம்'

15 - 05 - 1994

ஞாயிறு காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தொடர்ந்து களத்தில் மலர்ந்தவை.

## பிரதேச செயலக வெற்றிடங்கள் விரைவில் நிரப்ப நடவடிக்கை

### அமைச்சர் அமரதுங்கா அறிவிப்பு

கொழும்பு, மே 14

பிரதேச செயலகங்களில் உள்ள அனைத்து வெற்றிடங்களும் விரைவில் நிரப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜோன் அமரதுங்க முன் கண்டவாறு தெரிவித்தார்.

பிரதேச செயலாளர்களை மாவட்ட ரீதியாக சந்தித்துப் பேச்சு நடத்தியபோது அவர் இத்தகவலை வெளியிட்டார்.

கடந்த திங்கள் தெற்கு மாவட்டங்களைச் சேர்ந்த பிரதேச செயலர்கள் மத்தியில் அவர் பேசினார். (ஒ-எ)

மாத்தளை ஐ. தே. க. பிரமுகர் கொலை:

## வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி கோரிக்கை

### 3 அமைச்சர்கள் டி. பியிடம் வற்புறுத்து

கொழும்பு, மே 14

மாத்தளை மாநகரசபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ரவிமர் ஹூசேனின் கொலையின் பின்னால் உள்ளவர்கள் பற்றிய விவரங்களை பகிரங்கமாக்கி, இக் கொலை தொடர்பான பல்வேறு வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி —

மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று அமைச்சர்கள் ஜனாதிபதி விஜேதுங்காவைக் கோரியுள்ளனர்.

கப்பல் போக்குவரத்து மற்றும் துறைமுகங்கள் அமைச்சர் அலிக் அலுவிஹாரே, சமூக-கலாசார ஒருங்கிணைப்பு அமைச்சர் பி. பி. கவிரத்ன, விவசாயத்துறை சந்தைப்படுத்தல் அமைச்சர் ஜே. பி. விஜேரத்ன பண்டா ஆகியோரே இவ்வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

அமைச்சர்கள் அலிக் அலுவிஹாரே, கவிரத்ன ஆகியோரின் புதல்வர்கள் ஹூசேனின் படுகொலையில் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுவதைத் தொடர்ந்தே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொலையில் சம்பந்தப்பட்டவர்களைப் பிடித்து சட்டத்தின் முன் நிறுத்தும்படியும் அதன் மூலம் தங்கள் புதல்வர்களின் மீதுள்ள சந்தேகத்தை தெளிவுபடுத்தும்படியும் அவர்கள் ஜனாதிபதியை கேட்டுள்ளனர்.

அமைச்சர் அலிக் அலுவிஹாரேயின் புதல்வர் ரஞ்சித் அலுவிஹார மாத்தளை மேயராக இருக்கிறார். அமைச்சர் கவிரத்னாவின் புதல்வர் மாநகர சபை உறுப்பினர்களில் ஒருவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

# நூற்றுக்கணக்கில் கிரிமினல்கள் கைது;

கொழும்பு, மே 14

நாட்டின் பல பகுதிகளில் நூற்றுக்கணக்கான கிரிமினல் நபர்களைப் பொலீஸார் கைது செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காலி, மாத்தறை, குருநாகல், அனுராதபுரம் பகுதிகளில் இக்கைதுகள் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பொலீஸாரால் தேடப்பட்டுவரும் முக்கிய நபர்களும் இராணுவத்தை விட்டு தப்பியோடிய நபர்களும் உள்ளனர் என்றும் பொலீஸார் தெரிவித்தார். (ஒ-எ)

## பாப்பரசரின் இலங்கை விஜயம்

கொழும்பு, மே 14

அடுத்த ஆண்டு இலங்கை வரவுள்ள பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் இலங்கை விஜயம் தொடர்பான நிகழ்ச்சி நிரல் பற்றிய விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி பிற்பகல் 3மணிக்கு பாப்பரசர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததும், சம்பிரதாயபூர்வமாக இலங்கை மண்ணை அவர் முத்தமிடுவார்.

பாப்பரசரை கௌரவித்து வரவேற்கும் பொருட்டு 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்படும்.

பின்னர் மோட்டார் பவனியாக கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் தேவாலயத்துக்கு அவர் அழைத்து வரப்படுவார்.

அன்றைய தினம் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் வைத்து ஏனைய மதத்தலைவர்களை 45நிமிட நேரம் சந்திப்பார்.

அன்று ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியையும் சந்திப்பார்.

17ஆம் நூற்றாண்டின் போதகரும், குரு பிரசாதியுமான தந்தை ஜோசப்வாஸ் அடிகளாரை மறுநாள் காலை 9 30 மணிக்கு காலிமுகத் திடலில் வைத்து புனிதராக்கும் நோக்குடனேயே பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கிறார்.

அன்று [illegible] விமானத்தில் [illegible] பயணமாவார். (ட-3)

பிரேமா கொலை தொடர்பாக

## மற்றொரு தமிழ் இளைஞர் பொலீஸ் விசாரணையில்!

கொழும்பு, மே 14

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா கொலை தொடர்பாக ராஜேந்திரகுமார் என்ற தமிழ் இளைஞர் அண்மையில் கைது செய்யப்பட்டார் என்று கொழும்பு மேலதிக நீதிமன்றத்தில் கடந்த வாரம் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு மேதினம் அன்று பிரேமதாஸா மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலின் போது உயிரிழந்த பாபு என அழைக்கப்படும் வீரகுமாரின் நெருங்கிய சகா எனக் கருதப்படும் இவரை பொலீஸார் விசாரித்து வருகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தலைமறைவாகியுள்ள இந்திரா என்றழைக்கப்படும் செல்லம் மைனாஸ் மற்றும் செல்வராஜ் பற்றிய தகவல்களைப் பெறுவதே இவ் விசாரணையின் நோக்கம் என்று இரகசியப்பொலீஸ் திணைக்களத்தின் பிரதம இன்ஸ்பெக்டர் மகேஸ் பெரேரா கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை தெரிவித்தார்.

இக்கொலை தொடர்பாக எஸ். ரவீந்திரன், ஜோசபாரத்தினம், பரமசாமி நித்தியானந்தன், ராஜேந்திரகுமார் ஆகியோருடன் இன்னும் ஒருவர் உட்பட ஐந்துபேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேல் விசாரணை அடுத்த மாதம் 15ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

## உயர் கல்வி ஆங்கிலம் கற்கைநெறி

யாழ்ப்பாணம், மே 14

திறந்த பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி ஆங்கிலம் கற்கைநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒருமணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி அட்டைகளை பிராந்திய இயக்குநரிடம் பெறுமாறு கோரப்பட்டுள்ளது. (ஒ-3)

திருவிழாக் காலத்தில்

## கோயில் சுற்றாடலில் வீதி விளக்குகள்!

### மாநகரசபை அமைத்துக் கொடுக்கும்

திருவிழா நாட்களில் — ஆலயச் சுற்றாடலில் — தற்காலிகமாக வீதி விளக்குகளை அமைத்துக் கொடுக்க மாநகர சபை முடிவு செய்துள்ளது.

மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆலயங்களுக்கே வீதி விளக்குகள் அமைத்து கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாநகரசபை பொறியியலாளர் திரு. வே. நவரத்தினராசா இத்தகவலைத் தெரிவித்தார். (ஒ-17)

# இலங்கை அரசுக்கு எதிராக கனடா பிரமுகர் பிரசாரம்!

### ஆட்சேபம் தெரிவிக்கிறது ஸ்ரீலங்கா

கொழும்பு, மே 14

கனடாவைச் சேர்ந்த பாரிஸ்டரும் சொலிசிட்டருமான மார்க்ஸ் பெர்ஜர் இலங்கை அரசுக்கு எதிராக திட்டமிட்டு பொய்ப்பிரசாரத்தை மேற்கொண்டு வருவதாக இலங்கை அரசு குற்றஞ்சாட்டியுள்ளதுடன் —

இது தொடர்பாக கனடா அரசுக்கு இலங்கை அரசு ஆட்சேபம் தெரிவிக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவிலும் ஏனைய நாடுகளிலும் புகலிடம் கோரும் இலங்கைத் தமிழர் தொடர்பாக திரு. மாக்ஸ் பெர்ஜர் பிரசாரம் செய்து வருகிறார்.

இப்பிரசாரத்தின் போது அவர் உண்மைகளைத் திரித்துக் கூறியும் கொழும்பு அரசைக் கண்டித்தும் வருவதாக இலங்கை அரசு குற்றஞ்சாட்டியிருப்பதாக அதிகாரபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி, ''தஐலண்ட்'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியை மேற்கொள்ள கனடாவுக்கு வருமாறு அமைச்சர் தொண்டமானை திரு. பெர்ஜர் அழைத்திருந்ததும்—

உள்நாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வெளிநாட்டு உதவி தேவையில்லை என்று ஜனாதிபதி விஜேதுங்கா ஆலோசனை கூறியதைத் தொடர்ந்து தொண்டமானின் கனடா பயணம் இடம் பெறாததும் தெரிந்ததே.

சுவிற்சர்லாந்தில் உள்ள அகதிகளுக்கான சட்டத் திணைக்களத்துக்கு அனுப்பிய கடிதமொன்றில் இலங்கைத் தமிழரை அவர்களின் தாயகத்துக்கு திருப்பி அனுப்புவதை புனராலோசனை செய்யும்படி திரு. பெர்ஜர் கேட்டிருக்கிறார்.

கனடாவில் புகலிடம் கோரும் இலங்கைத் தமிழரின் ஏகப்பிரதிநிதியாக திரு. பெர்ஜர் செயல்பட்டு வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## தெற்காசிய தொழிற்சங்க தலைவராக தொண்டா!

### மீண்டும் தெரிவானார்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் சுற்றுலா கிராமிய தொழிற்துறை அமைச்சருமான எஸ். தொண்டமான் தெற்காசிய பிராந்திய தொழிற்சங்க சபையின் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் அண்மையில் நடைபெற்ற மாநாடு ஒன்றிலேயே தொண்டமான் தலைவராகத் தெரிவானார்.

சார்க்கின் தொழிலாளர் அமைப்பாக இந்தச்சபை 1988 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. தெற்காசியாவின் சுதந்திர தொழிற்சங்கங்களின் சர்வதேச சம்மேளனங்கள் இவ்வமைப்பில் அங்கம் வகிக்கின்றன. இலங்கையில் இருந்து இதில் அங்கம் வகிக்கும் ஒரே ஒரு தொழிற்சங்கம் இ.தொ.காவாகும். (ஒ-த)

தொகுதிக்கு ஒருவர் என்பதற்கு பதிலாக

## ஐம்பது வீடுகளுக்கு ஓர் அமைப்பாளர்!

### ஐ. தே. கவின் புதிய நடைமுறை

கொழும்பு, மே 14

தொகுதிக்கு ஓர் அமைப்பாளர் என்பதற்குப் பதிலாக ஐம்பது வீடுகளுக்கு ஓர் அமைப்பாளரை நியமிக்கும் புதிய நடைமுறையை ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா இத் திட்டத்தை மொரட்டுவையில் முதலில் ஆரம்பித்துள்ளார்.

புதிய முறையின் கீழ் ஒரு தேர்தல் தொகுதியில் பல அமைப்பாளர்களை ஐக்கிய தேசியக் கட்சி கொண்டிருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## மாகாண சபை அதிகாரங்களை கேட்டு நீதிமன்று செல்ல முடிவு

### முதலமைச்சர் தொடங்கொட அறிவிப்பு

கொழும்பு, மே 14

மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்களை உறுதிப்படுத்துமாறு கேட்டு வெகு விரைவில் நீதிமன்றம் செல்ல இருப்பதாக தென்மாகாண சபை முதலமைச்சர் அமர சிறி தொடங்கொட தெரிவித்தார்.

தென்மாகாண சபையும் மேல்மாகாண சபையும் கூட்டாக இந்த வழக்கை தாக்கல் செய்யும் என்றும் அவர் சொன்னார்.

[illegible] உரையாற்றும் போதே அவர் இவ்வாறு சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது:

மாகாணசபைகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களுக்கமைய பொலீஸ் நிர்வாகம் மாகாண சபை அமைப்புக்கு உட்பட்டதாகும். ஆனால் இதற்கு முரணாக பொலீஸ்மா அதிபரினால் எமது அனுமதியின்றி தென்மாகாணசபை, காலி, மாத்தளை ஆகிய இரு பிரதி பொலீஸ்மா அதிபர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக எமது ஆட்சேபனையை பொலீஸ்மா அதிபரிடம் தெரிவித்துள்ளோம் — என்றார். (ஒ-த)

## ஆலயங்களில்

சங்கானை வெல்லிக்கு ஸ்ரீ முருகமூர்த்தி கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 24 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க)

★ ★ ★

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயில் மகோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 23ஆம் திகதி இரதோற்சவமும் மறு நாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

உற்சவ காலத்தில் தினமும் மாலை 6-30 மணி முதல் இரவு 8மணி வரை கம்பன் கழகத்தைச் சேர்ந்த திரு. ஆறு. திருமுருகன் சமயச் சொற்பொழிவு ஆற்றுவார்.

★ ★ ★

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். (த)

★ ★ ★

நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் மகோற்சவம் நாளை ஆரம்பமாகின்றது. உற்சவத்தை முன்னிட்டு தினமும் இரவு 8 - 30 மணிக்கு பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவினால் ''கீலிபாரதம்'' தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்த்தப்படும்.

★ ★ ★

வரணிவடக்கு கும்பிட்டான் கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து பத்து நாட்கள் நடைபெறும் 24ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்ததிருவிழாவும் இடம் பெறும். (ஒ)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு வதரீபீட மன்றுளாடும் விநாயகர் ஆலயத்தின் வடாந்த மகோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெறும்.

உற்சவ நாட்களில் தினமும் மாலை 5 மணிக்கு விநாயகர் புராணம் என்ற பொருளில் கம்பன் கழகத்தைச் சேர்ந்த ஆறு திருமுருகன் சொற்பொழிவாற்றுவார். (த-17)

★ ★ ★

சுழிபுரம் பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயத் திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது திருவிழா நாட்களில் தினமும் பிற்பகல் 4 மணி முதல் பிரம்மஸ்ரீ வை, நித்தியானந்த சர்மாவின் கந்த புராண விரிவுரைகள் இடம் பெறும். (க-28)

★ ★ ★

வட்டுக்கோட்டை மேற்கு சின்னக்கதிர்காமம் முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பமாகிறது. தேர்த்திருவிழா இம்மாதம் 23 ஆம் திகதியும். வைகாசி விசாகப் பூரணை தினமான 24 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (எ)

★ ★ ★

சித்தன்கேணி பெரியவளவு ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோயில் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது, திருவிழா நாட்களில் தினமும் இரவு 7'30 மணி முதல் சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெறும். (க-28)

## பாடசாலைகளில்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2- 30 மணிக்கு பிக்னல் மெமோறியல் விளையாட்டு அரங்கில் ஆரம்பமாகும்.

பிரதம விருந்தினர்களாக டாக்டர் ஜெயகுலராஜாவும் பாரியாரும் கலந்து கொள்வர்.

★ ★ ★ (ஒ-20)

சுழிபுரம் பிரகாஷ் சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் 1 மணிக்கு சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (த-28)

## விலை வீழ்ச்சி

தென்மராட்சி,மே 14

தென்பருவப் பெயர்ச்சிக் காற்று வீசத் தொடங்கியுள்ளதால் சந்தைகளில் மீனின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. (ஒ- 117)

குளம் இல்லா ஊருக்கு பசுமை இல்லை
நீரில்லா ஊருக்கு நிறைவு இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### MRS. E.V. PONNUTHURAI

அராலியைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோரா நேசமலர் பொன்னுத்துரை 12-5-94 அன்று 3, முன் தெரு யாழ்ப்பாணம் (மத்திய கல்லூரிக்கு அருகில்) காலமானார்.

இவர் காலஞ்சென்ற E. V. பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், மகிழ், இருமை, கருணம், கருணாகரன், புனிதம், சந்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வராசா தம்பையா, அல்பேட் இராசையா, காலஞ்சென்ற Dr. சாள்ஸ் கனகசுந்தரம், வசந்தி ராஜ் சாமுவேல் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை 12-5-94 பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று பரிபோவன் மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:
மகிழ்மலா,
செல்வராசா தம்பையா

3, Front Street,
Jaffna.

(30881)

### திருமதி நடராசா சிவஞானவல்லி

கட்டுடையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நடராசா சிவஞானவல்லி 12-05-94 இல் காலமானார்.

அன்னார் திரு. நடராசா (இளைப்பாறிய ஆசிரியர், விக்டோறியாக் கல்லூரி, சுழிபுரம்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ஈ. ரூபராணி, தேவராஜன், விமலராணி, யோகராஜன் (இங்கிலாந்து), திருமதி ச. கமலராணி (இங்கிலாந்து), விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. ஈஸ்வரதாசன் (தொழிற்சாலை உத்தியோகத்தர், தலவாக்கலை எஸ்டேட்), திரு. சதாசிவம், ஸ்ரீஜெயதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி தர்ஷிகா அருணாசலம், ரேணுகா, தயாளன், சஜன், நிரோஷன், மோகன், அருண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சனிக்கிழமை (14-5-94) 10 - 00 மணிக்கு கட்டுடை இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திரு. தா. நடராசா

கட்டுடை,
மானிப்பாய்.

(30861)

### தில்லையம்பலம் இரத்தினம் (T. R.)
(வேலணை)

09-05-94 கனடாவில் அமரமரணமடைந்த தில்லையம்பலம் இரத்தினம் அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று [14-05-94] சனிக்கிழமை கனடாவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
தி. செல்வராஜா,
தி. செல்லத்துரை.
சகோதரர்கள்,

66/1, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை,
சுந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[30876]

திருமதி
### கேதீஸ்வரதாசன் நல்லைநாயகி

நாயன்மார்கட்டைச் சேர்ந்த கேதீஸ்வரதாசன் நல்லைநாயகி 11 - 05 - 1994 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கேதீஸ்வரதாசனின் அன்பு மனைவியும், ராதாகிருஷ்ணன், கிருஷ்ணகுமார், கிருஷ்ணவதனி, கிருஷ்ணானந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோநாயகம், கமலநந்தன், கமலவேணி ஆகியோரின் சிறிய தாயாரும், ஸ்ரீதேவி நடராசா, சௌந்தரராஜா, தவமணி இராசாம்பிகை, சண்முகராசா ஆகியோரின் மாமியாரும், அமுதவல்லி காலஞ்சென்ற சரவணமுத்து, முத்துலிங்கம் ஆகியோரின் சகோதரரும், திருநாவுக்கரசு, காலஞ்சென்ற யோகம்மா, பூரணம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 15 - 05 - 1994 ஞாயிற்றுக்கிழமை கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. சௌந்தரராஜன்
(மருமகன்)

அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

[30878]

### கணபதி பிள்ளை சிவகுமார்
(ஐயாக்கிளி)

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவகுமார் நேற்று நண்பகல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை திருமதி நேசம்மா தம்பதிகளின் அன்பு புதல்வரும், திருமதி மல்லிகா அவர்களின் அன்புக் கணவரும், இ. பாஸ்கரனின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நண்பகல் 11 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
இ. பாஸ்கரன்
(மருமகன்)

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

(30884)

### திருமதி பிச்சையப்பா சறோஜா

திருமதி பிச்சையப்பா சறோஜா நேற்றுக் காலமானார். இவர் பிரபல நாதஸ்வர வித்துவான் P. S பிச்சையப்பா அவர்களின் அன்பு மனைவியாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் நேற்று மாலை நடைபெற்றன என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:-
ரவி, ரஜி
(மகன்மார்)

259, சங்கிலியன்தோப்பு,
நல்லூர்.

(30885)

## யாழ். ஸ்ரீதரில்....

தினசரி மாலை 3 மணி, 6 மணி
சனி, ஞாயிறு காலை 10.30 மணி, மாலை 3 மணி, 6 மணி

**'காற்று வெளி'**

இத்துடன்
மார்ச் 94
**"ஒளிவீச்சு"**
காண்பிக்கப்படும்

**16 - 05 - 94 முதல்**
**'மண்ணுக்காக'**

(சி-8133)

## யாழ் கல்லூரி
## பட்டப் படிப்புக்கள் பிரிவு
யாழ்ப்பாணம்.

**1994/95** கல்வியாண்டு
யாழ். பல்கலைக்கழக
**கலை முதற் தேர்வு G. A. Q.**
வெளி வாரி விரிவுரைகள் ஆரம்பமாகின்றன

பாடங்கள்:

1. பொருளியல்
2. மெய்யியல்
3. அளவையியலும் விஞ்ஞான முறையும்
4. அரசியல் விஞ்ஞானம்
5. ஆங்கில இலக்கியம்
6. அடிப்படை ஆங்கிலம்
7. இந்துநாகரிகம்
8. தமிழ்
9. அடிப்படைக் கணிதம்
10. கிறிஸ்தவ நாகரிகம்

**ஆரம்பம்: 15 - 05 - 1994**

விபரங்கட்கு:
யாழ் கல்லூரி,
பட்டப் படிப்புக்கள் பிரிவு
464 மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/8143)

வேலணை கிழக்கு
## தில்லையம்பலம் இரத்தினம் T. R.
(பாலசிங்கம்)
அவர்களுக்கு

## எமது கண்ணீர் அஞ்சலி



வெள்ளைநிறம் வெளியிலுண்டு வெறுமனஞ்சுள்ளம்
வல்லமைச்சொல் வம்பேசும் மனிதமில்லை
இப்படியுமினங்கள் வாழும் இவ்வுலகில் கண்ணே
இனியவனாய், நல்லியல்பினாய்... வாழ்ந்த நாளில்
கனடாவில் காலனவன் கவர்ந்த செய்தி... கடல்கடந்து
சாவு கேட்டோம் கலங்கி நின்றோம்
பொய்தானே... இல்லையில்லை மெய்யே பொய்யாய்
போனதை உண்மையென்று பின்னர் கேட்டு
புலம்புகின்றோம் புண்ணியவான் எங்கே சென்றீர்
பிரிவறிந்த ஊராரும் நினைந்து நிற்க
உறவினர்கள் உளம் உருகி வாடி நிற்க
ஊர்விட்டு ஊர்சென்று உறங்கிவிட்டீர்
ஊர்சென்றே அம்பிகையின் பாதமடைய
இங்கிருந்து பிரார்த்திக்கின்றோம் இவ்விறுதி நாளில்

**தீபா நகையகம்**
177, கஸ்தூரியார்வீதி
யாழ்ப்பாணம்.

● 09-05-94 இல் அகால மரணமடைந்த T. R., அவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று கனடாவில் நடைபெறுகின்றன.

[30873]

## இன்று

கைதடி வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட யுவதிகளினால் தயாரிக்கப்பட்ட தையல் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் சங்க மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையினால் ஆரம்பித்து வைக்கப்படும்.

★ ★ ★

கைதடி மேற்குப் பகுதியில் இதுவரை திருமணப் பதிவு செய்து கொள்ளாத 100 பேருக்கான திருமணப் பதிவு இன்று பிற்பகல் 3 மணிக்கு கைதடி கலைவாணி பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

கைதடி மேற்கு சரஸ்வதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழாவில் தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார். (த-117)

★ ★ ★

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த ஆய்வரங்கும், புதிய மாணவர்களுக்கான தொடர்விரிவுரை வகுப்புக்களும் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும். ஆய்வரங்கில் 'சோதிடம் ஓர் பார்வை' என்ற பொருளில், சபையோர் ஆய்வரங்கு இடம் பெறும். [த]

★ ★ ★

யாழ். இந்து மைதானச் சந்தியில் அமைந்துள்ள மெய்கண்டதேவர் ஆதீனத்தில் இன்று காலை 9 மணி முதல் விறல் மிண்ட நாயனார் குருபூசை நடைபெறும். (த)

## சேவை நலம் பாராட்டுவிழா

யாழ். சென் ஜெனடிக்ற் றோமன் கத்தோலிக்க வித்தியாலய முன்னாள் அதிபர் அருட்சகோதரி எம். லைசாவின் சேவைநலம் பாராட்டு விழா இன்று காலை 11 மணிக்கு கல்லூரியில் டாக்டர் உமாகாந்தன் தலைமையில் நடைபெறும்,

பங்குத் தந்தை அருட்திரு அன்ரன்மத்தாயஸ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். இதை ஒட்டி புனித யூசீவாதம்பர் தேவாலயத்தில் விசேட நன்றி திருப்பலிப்பூசை நடத்தப்பட்டு தொடர்ந்து மாலையில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்,

## பால்மா முத்திரை

1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்குரிய ஒருவயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் பால்மா முத்திரைகள் அண்மையில் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

## சொத்தி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணையின் போது சொத்தி உபாலி கூண்டுக்குள் அடைக்கப்பட்டிருக்க, பொலிஸார் வெளியில் நின்றபடி விசாரணை நடத்தினர் என்று கம்பஹா மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி. ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

குற்றங்களை மூடி மறைக்கும் விதத்தில் பொலிஸார் சொத்தி உபாலியை விசாரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சொத்தி உபாலி கைது செய்யப்பட்டு பம்பலப்பிட்டி பொலீஸில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற தகவல் அறிந்து அங்கு லங்காதீப செய்தியாளர்கள் இருவர் விரைந்து சென்றனர். பொலீஸ்நிலையத்தில் சொத்தி உபாலி நீண்ட வெள்ளை நிறச் சேர்ட் அணிந்திருந்தார். கைக்கடிகாரம் கட்டியிருந்தார், மற்றும் புகைபிடித்தவாறு அவர் காட்சியளித்தார் என்று இரு செய்தியாளர்களும் தெரிவித்திருக்கின்றனர்.

தற்போது அமுல் நடத்தப்படும் சாதாரண சட்ட விதிகளின் கீழ் கைதான எவரும் புகைபிடிக்க அனுமதிக்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை — சித்தகே அமரசிங்காவின் குடும்ப உறுப்பினர்கள் ஒன்பது பேர் சொத்தி உபாலி குழுவினரால் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து பொலீஸாருக்கு ஏற்கனவே முறையிடப்பட்டிருந்தும் பொலீஸார் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றும் மீண்டும் புதிதாக முறையிடப் போவதாகவும் சித்தகே அமரசிங்காவின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (இ-எ-6)

## விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 14

யாழ் மாவட்டத்திற்கு உட்பட்ட வர்த்தகர் சங்கங்கள் கூட்டுறவுச் சங்க பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், சிக்கனக் கூட்டுறவுச் சங்க இயக்குநர்கள், சனசமூக நிலைய சமாஜ நிர்வாகத்தினர் ஆகியோருக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஈ)

## தமிழர்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தெரிவித்தார்:

அரசுக்குள்ளும், ஆளும் கட்சிக்குள்ளும் நிலவும் போட்டி மற்றும் உள்ளகப் பிரச்சினைகளினால் வடக்கு - கிழக்கு நிலை குறித்து முடிவு எடுக்க முடியாத நிலையில் அரசு உள்ளதாகவும் அவர் கூறினார்.

தேர்தல்களை நடத்துவதற்கும், அவற்றில் வெல்லும் பொருட்டு புதிய சலுகைகளை மக்களுக்கு அறிவிப்பதிலும் அரச உயர் பீடம் ஆர்வம் காட்டி வந்தாலும் —

வடக்கு-கிழக்கு பிரச்சினை விடயத்தில் என்ன செய்வது. தேர்தலை முன்னிறுத்தி எவ்வித நடவடிக்கையில் இறங்குவது என்பதில் ஆளும்கட்சிக்கும், அரச உயர் பீடத்துக்கும் இன்னும் உரிய அக்கறை பிறக்கவில்லை — என்பதனையே அவதானிக்க முடிகிறது என்றும் அந்த அதிகாரி மேலும் சொன்னார். (அ-3)

## வெளிக்கள ஆய்வு

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புவியியற்றுறை முதலாம் வருட மாணவர்கள் குழுக்கள் பற்றிய ஒரு வெளிக்கள ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளுமுகமாக இன்று சனிக்கிழமை யாழ்ப்பாண நகரின் கரையோரப் பிரதேசங்களுக்கு ஆய்வுப் பயணம் ஒன்றை மேற்கொள்கின்றனர்.

இந்த ஆய்வுக்கு வேண்டிய உதவிகளை வழங்குமாறு இப்பகுதி வாழ்மக்களை புவியியற்றுறைத் தலைவர் கேட்டுள்ளார். (இ-எ)

## விவசாய ஓய்வூதியம்

யாழ். மாவட்டத்தில் உள்ள விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளின் 1994 மே மாதத்துக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10,00 மணிக்குமத் தொழில் காப்புறுதிச்சபை மாவட்டக் காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளது. (இ)

## தீவுப்பகுதிக்கான கடிதங்கள்

யாழ்ப்பாணம், மே 14

தீவுப்பகுதிகளுக்கான கடிதங்களை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு முன்னதாக யாழ். பிரதம தபாலகத்தில் உள்ள தபால் பெட்டியில் சேர்க்குமாறு யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் கேட்டுள்ளார்.

இத்தபால்கள் அனைத்தும் திங்கட்கிழமை தீவுப்பகுதிகளுக்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரால் எடுத்துச் செல்லப்படும் என தெரிவிக்கப்பட்டது.

## சொத்தி உபாலி---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சகோதரிகளான சுனிதா, சாந்தி, மார்கரட் ஆகியோரை கட்டுகாஸ்தோட்டைப் பொலிஸார் கைது செய்திருக்கையில்—

இன்னொரு இடத்தில் இருந்து வந்த பொலிஸ் கோஷ்டி சொத்தி உபாலியைக் கைது செய்தது குறித்து சந்தேகம் எழுந்திருப்பதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சொத்தி உபாலி, அவரது நடவடிக்கைகள் குறித்து விசாரிக்க வேண்டும் என்பதில் உண்மையில் தீவிரமாக உள்ள பொலிஸ் குழுக்களினால் கைது செய்யப்படுவதைத் தடுக்கு முகமாக, சொத்தி உபாலியின் நடவடிக்கைகளுக்குப் பின்னணியில் இருந்து உதவிய அரசியல் வாதிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் திட்டமிட்டு செய்த சூழ்ச்சியின் ஒரு அம்சமாகவே கொழும்பில் இருந்து பொலிஸ் கோஷ்டி ஒன்று கட்டுகாஸ்தோட்டைக்குச் சென்று உபாலியைக் கைது செய்தது என்று சந்தேகிக்கப்படுகிறது.

பி. பி. ஸியின் சிங்களச் சேவைச் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ இத்தகவல்களை வெளியிட்டார். (இ-எ-6)

## JAFFNA COLLEGE

**INTER HOUSE ATHLETIC MEET**

Will be held on
Saturday 14th at 2.30 p m,
At Bicknell Stadium

Chief Guests
**DR. & MRS**
**T W JEYAKULARAJAH**

Alumni, Parents and Friends are Cordially Invited

G. RAJANAYAGAM
Principal

[C-8141]

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னப்பிள்ளை முத்துத்தம்பி

நீர்வேலி வடக்கு மாசுவனையைப் பிறப்பிடமாகவும் உரும்பராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை முத்துத்தம்பி நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னையா முத்துத்தம்பியின் அன்பு மனைவியும், நாகம்மா, செல்வரட்ணம், இராசரத்தினம், புண்ணியமூர்த்தி, சரஸ்வதி, நவரட்ணம், ஜெயரட்ணம், புஸ்பராணி, ஆகியோரின் பாசமிகு தாயாரும், பஞ்சலிங்கம், பத்மாவதி, பரமேஸ்வரி, கருணாநிதி, சிவராசசிங்கம், சிவநேசமலர், சிவநேஸ்வரி கணேசர், ஆகியோரின் அன்பு மாமியாரும், கலைச்செல்வன், றட்ணசிறீ (மகிந்தன்), சுகந்தன், உதயசந்திரன், உதயசுதன், சுநந்தினி, சுதர்சினி, சுதர்சன், அன்பு மொழி, அருள் மொழி, கலைச்செழியன், சசிதேவா, தனுஜா, தர்சினி, லக்சினி தவபாலினி தர்மினி, சிவதனுஜன், ஜெயந்தன், ஜெயந்தினி, சர்மிளா, கார்த்திகா, சிவப்பிரியா, மணிமொழி, வருணன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நண்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:-
மு. செல்வரட்ணம்
(மகன்)

வேம்பன் வீதி,
உரும்பராய் தெற்கு.

(30887)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் பிறைவேற் லிமிடெட்டினரால் ... 361/3 ... 14 - 05 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org